# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.
# S.C. NO. 27/2015

**07.02.2025.**
**Accused 1,2, 3 present.**

**அ.சா.3** வேளாங்கண்ணி த/பெ. வனத்தையன்

**எதிரிகள் தரப்பில் குவிமுச. 311 மனு அனுமதிக்கப்பட்டு அ.சா. 3 மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

மார்ட்டின் சார்லசை நான் தான் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன் .. பாண்டிச்சேரி மருத்துவமனை மருத்துவரிடம் நடந்தவிவரங்களை யார் சொன்னது என்றால் சார்லஸ்தான் சொன்னார் . அதற்கு முன்னர் அவர் சிகிச்சை பெற்ற வேட்டவலம் மற்றும் விழுப்புரம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் விவரத்தை யார் சொன்னார்கள் என்றால் வேட்டவலம் மருத்துவமனைக்கு நாங்கள் அழைத்து செல்லவில்லை. நேரடியாக விழுப்புரம் அரசுமருத்துவமனைக்குஅழைத்து சென்றோம். அங்கு மருத்துவரிடம் விவரங்களை சார்லஸ் தான் சொன்னார் . ஜிப்மர் மற்றும் விழுப்புரம் அரசுமருத்துவமனை மருத்துவரிடம் நாங்கள் சம்பவத்தை பற்றி சொன்னோமா என்றால் எனக்கு அதைப்பற்றி ஞாபகம் இல்லை . பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றபோது சார்லஸ் மது அருந்திய நிலையில் மயக்க நிலையில் சுய நினைவு இல்லாமல் இருந்தார் என்றால் சரியல்ல . அவருக்கு அறுவை சிகிச்சை செய்வதற்காக தலை மொட்டை அடித்து தயார் செய்தார்கள் என்றால் ஞாபகமில்லை . போலீசாரிடம் அவர் மோசமான நிலையில் இருந்ததால் எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல . அவருக்கு தலையில் கட்டி இருந்ததற்கு ஏற்கனவே அறுவை சிகிச்சை செய்து குடிபோதையில் கீழே விழுந்ததால் தான் அவர் இறந்தார் என்றால் சரியல்ல . ஜிப்மர் மருத்துவமனையில் சார்லஸ் எந்த வாக்குமூலமோ அல்லது ஆங்கிலத்தில் கையொப்பமோ செய்யவில்லை என்றால் சரியல்ல.. அவர் தமிழில் தான்

கையெழுத்து போடுவார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை..

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

Sd/- B.C. Gopinath.,M.L.,
Additional District Judge,
Tiruvannamalai.